Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



ஜுலை
15

# இறை ஊழியர் மார் இவானியோஸ் தினம்

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# மார் தோமாவின் நினைவு நாள்

ஜுலை
3

மலர் 20 ஜுலை 2023 இதழ் 07

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.07.2023 | Sunday | 10.00 am<br>5.00 pm | Holy Mass<br>Holy Mass | Verkilampi<br>Attoor |
| 03.07.2023 | Monday | 6.00 pm | Holy Mass | Ambilikonam |
| 04.07.2023 | Tuesday | | Monthly Recollection<br>Coordination of Commissions<br>UCC | Bishop's House<br>Bishop's House<br>Nagercoil |
| 05.07.2023 | Wednesday | | Marriage | Navalkadu |
| 06.07.2023 | Thursday | 9.30 pm<br>11.00am<br>5.00pm | E.M. School's Correspondents & Bursar's Meeting<br>College Correspondents & Bursar's Meeting<br>Holy Mass | Bishop's House<br>Bishop's House<br>Mar Ivanios-Tomb Chapel, Trivandrum |
| 08.07.2023 | Saturday | | Holy Mass | Pandithittai |
| 09.07.2023-11.07.2023 | Sunday - Tuesday | | TNBC | Coimbatore |
| 16.07.2023 | Sunday | | Holy Mass | Unnamalaikadai |
| 17.07.2023-31.07.2023 | Monday - Monday | | USA | |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 ஜூலை 2023 இதழ். 7

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***



## THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CCL 02/2023 05.06.2023

### குருமட தினம்

எமது மேய்ப்புப்பணிக்கு உட்பட்ட ஆயர்கள், கோர்-எப்பிஸ்கோப்பாமார்கள், ரம்பான்மார்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், துறவறத்தார்கள், இறைமக்கள் ஆகிய அனைவருக்கும் ஆசி.

சபை சார்ந்த வாழ்க்கையின் மிக முக்கியத் துறைகளில் ஒன்றான குருத்துவப் பயிற்சிகளுக்கு, நமது கவனத்தை சிறப்பான முறையில் ஈர்க்கும் முகமாகவும், நமது இறைவேண்டல்களை ஏறெடுக்கும் முகமாகவும் கடைப்பிடிக்கப்படுவதே குருமட தினம். சென்ற வருடத்தில் இத்தினத்தை முன்னிட்டு நான் எழுதிய சுற்றுமடலில், நம்முடைய மலங்கரை மேஜர் செமினாரியில் நிலவிவரும் பொருளாதாரப் பற்றாக்குறைகளைக் குறிப்பிட்டு உங்களுடைய கவனத்தை ஈர்த்திருந்தேன். அதன்மூலம் அன்றைய சூழலில் நிலவிவந்த இக்கட்டான சூழ்நிலையை முற்றிலும் புரிந்துகொண்ட நம்முடைய திருச்சபையின் சமூக அமைப்புகளும் மறைமாவட்டங்களும் தங்களால் இயன்ற உதவிகளைத் தாராள மனத்துடன் வாரிவழங்க முன்வந்தன. இதன் விளைவாக சுமார் 60 லட்சம் ரூபாய் பணத்தை சேகரிக்க முடிந்தது என்பதை மிக்க உவகையுடன் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்காக மனமுவந்து ஒத்துழைத்த மேதகு ஆயர்களுக்கும், மதிப்புக்குரிய அருட்தந்தையர்களுக்கும் துறவற சமூகத்தவர்க்கும், அன்பு மிக்க இறைமக்களுக்கும் திருச்சபையின் சார்பில் இதயபூர்வமான நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மலங்கரை மேஜர் செமினாரியின் பொருளாதாரக் கட்டமைப்பில், உட்கார்ந்து பொறுமையுடன் யோசிக்க வேண்டிய காரியங்கள் நிறையவே

உள்ளன. கடந்த வருடம் சேகரித்த பணத்தில் பாதியை அன்றிருந்த கடன் பாத்தியதைகளை சமாளிக்கவே சரியாக இருந்தது. மீதமிருந்த பணத்தில் ஒரு பெரும்பகுதியை உட்கட்டமைப்புகளில் காணப்பட்ட மின் பழுதுகளை சீர் செய்யச் செலவிடப்பட்டது. மேலும், காலப்பழக்கத்தால் பழுதடைந்திருந்த நீர்த்தேக்கம் மற்றும் விநியோகங்களுக்கும் ஒரு பெருந்தொகை செலவிடவேண்டியிருந்தது. கூடவே அன்றிருந்த பணப்பிரச்சனைகளின் பின்னணியில், சில மாதங்களுக்கான அன்றாடத் தேவைகளையும் அத்தொகையினாலேயே சமாளிக்க முடிந்தது.

எனினும் பிரச்சனைகள் முடிந்தபாடில்லை. எனவே, புனித பவுல் கொரிந்தியருக்குக் கூறுவது போல், “கடந்த ஆண்டிலிருந்தே நீங்கள் இப்பணியைச் செய்து வருகிறீர்கள்; அதனை விருப்பத்தோடு தொடங்கியவர்களும் நீங்களே. ஆர்வத்தோடு தொடங்கியதைப் போலவே, உங்கள் நிலைக்கு ஏற்றவாறு கொடுத்து, ஆர்வத்தோடு அதனைச் செய்து முடியுங்கள்” (2கொரி 8:10-11) என உங்களிடமும் எடுத்துரைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கக் கூடிய குடிநீர்ப் பிரச்சனைக்கு போர்க்கால அடிப்படையில் தீர்வு காண வேண்டியுள்ளது. பொருளாதாரத்தில் தன்னிறைவு எய்தும் பொருட்டும், ஒரு நிலையான வருவாய் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. மேலும், நாள்தோறும் பெருகிவரும் செலவினங்களை கட்டுக்குள் கொண்டு வருவது எப்படி எனவும் யோசிக்க வேண்டியுள்ளது. இவற்றுக்கான ஒரு தற்காலிகத் தீர்வு என்ற வகையில் குருமட வளாகத்தில் உள்ள பண்ணையில் பராமரிக்கப்படும் மிருகங்களுடன் அதற்கான அடிப்படை வசதிகளையும் அதிகப்படுத்தி, அத்துடன் இயற்கை எரிவாயு ஆலையையும் அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும், நீர்த்தேக்கத் தொட்டிகளை அகலப்படுத்தி தங்குதடையற்ற நீர்விநியோகம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பணிகள் தொடங்கப்படவுள்ளன. குருமடத்தின் அன்றாடச் செலவினங்களில் ஆண்டுக்கு சுமார் பதினைந்து லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருப்பதால் அதனையும் பரிகரிக்க வேண்டியுள்ளது.



எனவே இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு இவ்வாண்டைய குருமட தினத்தைக் கடைப்பிடிக்க நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். வரும் ஜூன் 25-ம் தேதி இத்தினத்தை நாம் கடைப்பிடிக்க உள்ளோம். இதற்கென நம்முடைய அன்பான இறைமக்கள் அனைவருக்கும் ஒரு கவர் (உறை) வழங்கப்படும். அதில் உங்களுடைய வள்ளன்மையின் காணிக்கையை வைத்து தாராள உள்ளத்துடன் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குருமட தினம் கடைப்பிடிக்கப்படும் அந்த ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறும் இறைவழிபாட்டில், குருமட அருட்சகோதரர்களும் குருமடப் பேராசிரியர்களும் முடிந்தவரை இறைமக்களுடன் இணைந்து மேற்படி சிக்கல்களை மையப்படுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது நம் இறையழைத்தல்களை இன்னும் ஊக்குவித்து வளப்படுத்தும் என நம்புகிறேன். இதற்காக நாம் அனைவரும் ஒருசேர இணைந்து இறைவனை நெஞ்சார மன்றாடும்படி உங்கள் யாவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் மேஜர் மற்றும் மைனர் குருமடங்களின் பொருளாதாரத் தேவைகளை இதுகாறும் தாங்கிப்பிடித்துக் கொண்டிருக்கும் எல்லா வள்ளல் பெருமக்களையும், பக்திமிக்க நலம்விரும்பிகளையும், உபகாரிகளையும் அன்புடன் நினைவுகூர்ந்து அவர்கள் அனைவருக்கும் மனமார நன்றி கூறுகின்றேன். அவர்களுக்காக இறைவேண்டல் செய்கின்றேன்.

கடவுள் உங்கள் அனைவரையும் மிகுதியாய் ஆசீர்வதிப்பாராக.

ஆண்டவரில் அன்புடன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க
திருஅவையின் முதன்மைப் பேராயர்
காதோலிக்கோஸ்

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை

# இறையழைத்தல் தினம் - 2023

## இறையழைத்தலுக்கான திருஅவை ஆணையத்தின் தலைவர் விடுக்கும் சுற்றுமடல்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பா மார்களே, மதிப்புக்குரிய ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவரில் அன்பான இறைமக்களே!*

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவையில் மே 28-ம் தேதியை நாம் இறையழைத்தல் தினமாக சிறப்பிக்கின்றோம். திருஅவையின் மிகப்பெரும் சிறப்புமிக்க நாளாகிய பெந்தகோஸ்து தினத்தன்று இவ்வாண்டைய இறையழைத்தல் தினம் கடந்து வருகிறது. திருஅவை தோற்றம் கொண்ட நாள் என்ற நிலையில் இன்று திருஅவையின் பிறந்த நாளாகும். இன்றைய நாள் நமது திருஅவை இறையழைத்தல் தினமாக கொண்டாடும் போது ஏராளம் இளம் இதயங்கள் தூய ஆவியின் தூண்டுதலால் ஆட்கொள்ளப்பட காரணமாக அமையட்டும். இறையழைத்தல் ஒரு கொடையும் கடமையுமாகும். ஒரு கிறிஸ்தவராக வாழ்வதற்கான அழைப்பு மிகப்பெரிய கொடையாகும். ஆனால் ஒரு குருவானவராக அல்லது துறவியாக மாறுவதற்கான அழைப்பை ஒருவர் பெற்றுக் கொண்டபோது அந்த கொடையின் சிறப்பு இன்னும் அதிகரிக்கிறது. மனிதனின் தகுதியோ, திறமையோ அல்லது ஆழுமையோ அல்ல, மாறாக கடவுளின் இரக்கமே ஒவ்வொரு அழைத்தலின் அடித்தளம். நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களை தேர்ந்து கொண்டேன் என்று இயேசுவும் விவிலியத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஒவ்வொரு அழைப்பும் கடவுளின் கொடை என்பதற்கான பல உதாரணங்கள் திருவிவிலியத்தில் நாம் காணலாம். தொடக்கநூல் 12-ம் அதிகாரத்தில் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தபோது, ஆபிரகாம் ஆண்டவரால் அழைக்கபடுவார் அல்லது தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதில் அவருக்கு எந்த உறுதிப்பாடும் இல்லை. ஆண்டவர் மோசேயை



முட்செடியிலிருந்து அழைத்த போது மோசே முற்றிலும் பலவீனமானவராக இருந்தார். குருவாகிய ஏலியும் அவருடைய மகன்களும் இருந்தபோதும், சிறுவனாக இருந்த சாமுவேலை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். 1 சாமுவேல் 9-வது அதிகாரத்தில் காணமல் போன தனது கழுதையை தேடிச் சென்ற சவுலை ஆண்டவர் அரசராக அருட்பொழிவு செய்தார். தாவீதை இஸ்ரயேல் மக்களுடைய அரசராக ஆண்டவர் அருட்பொழிவு செய்தபோது அவருடைய சொந்த தந்தை கூட அவரை தகுதியானவர் என்று கருதவில்லை. சிறுவனும் பேசத் தெரியாதவனுமாகிய ஏரேமியாவை கடவுள் தனக்காக தேர்ந்தெடுக்கிறார். யோனா இறைவாக்கினர் நூலில், தன்னிடமிருந்து அகன்று செல்ல முயற்சித்த யோனாவை கடவுள் தேர்ந்தெடுத்தார். புதிய ஏற்பாட்டில், குறிப்பிடுவதற்கு எந்த தகுதியோ திறமையோ அற்ற மீனவரையும், வரிதண்டுபவரையும், சாதாரண மக்களையும் இயேசு தனது சீடர் குலத்தில் சேர்க்கிறார். ஆண்டவரின் அழைப்பும், தேர்வும் தகுதியை முன்னிட்டு வழங்கப்படும் மாபெரும் கொடை அல்ல என்பதை இந்த உதாரணங்கள் நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

ஒவ்வொரு அழைப்பும் ஒரு கொடை என்பது போல அதனுடன் ஒரு கடமையும் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு கிறிஸ்தவராக இருப்பதற்காக அழைக்கப்படுவதன் மூலம், ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவை பின்பற்றி அவருடைய நற்செய்திக்கு சாட்சியாக மாற வேண்டிய கடமையை பெற்று கொள்கின்றனர். குருத்துவ திருநிலைக்கும், துறவற வாழ்வு நிலைக்குமான அழைப்பை ஒருவர் பெற்றுக்கொள்ளும் போது, அதை பெற்று கொள்பவரின் கடமை அதிகரிக்கிறது. ஆண்டவர் ஆபிரகாமை அழைத்த போது மக்களினங்களுக்கு தந்தையாகவும் தலைமுறைகளுக்கு ஆசீராகவும் இருக்கும் கடமையை அவரிடம் ஒப்படைத்தார். ஆண்டவரால் மோசே தேர்ந்தெடுக்கப்பட்ட போது எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்களுக்கு கடவுளின் அன்பும் மீட்பும் வெளிப்படுத்தும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. சிறுவன் சாமுவேல் கடவுளின் அழைப்பை பெற்ற போது அவருடைய இறைவாக்கினராகவும் மக்களின் நீதிதலைவராகவும் செயல்படுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பேசத் தெரியாத சிறுவனாக இருந்த எரேமியாவை ஆண்டவர் அழைத்து ஆற்றல்படுத்தி வேரோடு பிடுங்கவும், உடைத்து தகர்க்கவும் கட்டியெழுப்புவதற்குமான பணி

பொறுப்பை ஒப்படைத்து அனுப்பினார். இயேசு சாதராண மற்றும் பலவீனர்களாகிய சீடர்களை தேர்ந்தெடுத்து உலகின் கடையெல்லைவரை நற்செய்தி பறைசாற்றவும், அவருடைய சாட்சிகளாக மாறவும் அனுப்பினர்.

இந்த காலகட்டத்தில் இறையழைத்தல் ஊக்குவிப்பில் நாம் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டியதும் கவனம் செலுத்த வேண்டியதும் செயல்படுத்த வேண்டியதுமான சிலவற்றை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்:

முதலாவதாக, அழைப்பு பணிவிடைக்குரியதே. நம்பிக்கை சமூகத்திற்கு பணிவிடை புரியவும், சேவை ஆற்றுவதற்குமாக இவ்வழைப்பு ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இது தூய ஆவியின் கொடையாக விவரிக்கப்பட்டுள்ளது. பலவகை பணிகள் உண்டு. இந்த பணிகள் பொதுநிலையினராலும், குருக்களாலும் ஆற்றப்படுகிறது. அதிகார ஆணவமல்ல, பணிவிடையே இதன் குறிக்கோள். அழைக்கப்பட்டவர்கள் பணிவிடைபுரிவதற்கே என்பதே இயேசுவின் கூற்று.

இரண்டாவதாக, அர்ப்பண வாழ்வு ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கான அழைப்பாகும். இல்லற வாழ்விலிருந்து விலகி ஆன்மாக்களின் மீட்பிற்காக முழுமையாக பணிவிடை புரிய ஆர்வமுள்ளவர்கள் பெறும் அழைப்பாகும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து பொறுப்புகளின் மூலமாகவும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கான அழைப்பை பெறுகின்றனர். அவ்வகையில், இது ஓர் உன்னத வாழ்க்கை நிலையாகும். இது சொகுசு வாழ்க்கை வாழ விரும்புவர்களுக்கு உரியதல்ல. அர்ப்பண வாழ்வு என்பது ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக உழைக்க ஆர்வமுள்ளவர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு அழைப்பாகும். அப்பேற்பட்டோரின் எண்ணிக்கை குறைந்தாலும், பலன் குறையக்கூடாது. எண்ணிக்கை அல்ல, தரமே முக்கியம். ஆகவே ஆன்மாக்கள் மேல் தாகமுள்ளவர்களே இவ்வாழ்க்கை நிலைக்கு கடந்து வரவேண்டும்.

மூன்றாவதாக, கடவுள் அழைப்பு தருகிறார். அந்த அழைப்பை உணர்ந்து கொள்ள வேண்டும், அடையாளம் கண்டு கொள்ள வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். அதுவே நம்மால் செய்ய இயல்வது. அதன் ஒரு பகுதியாகவே இறையழைத்தல் ஊக்குவித்தல் தினத்தை நாம் கொண்டாடுகிறோம். ஆண்டவரின் அழைப்பை அடையாளம் கண்டு கொள்ள நமக்கு அல்லது நம்முடைய பிள்ளைகளுக்கு



இயல வேண்டும். கடவுளின் ஒவ்வொரு அழைப்பும் ஒரு தாயின் இதயத்தின் வழியாகக் சென்று அவருடைய பிள்ளைகளை சென்றடைகிறது என்று திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் குறிப்பிடுகிறார். ஒரு மகன் அல்லது மகளின் அழைப்பை தாய் முதலில் அடையாளம் கண்டு கொள்கிறாள். எனவே ஒவ்வொரு பெற்றோர்களும் இறையழைத்தலை உணர்ந்து கொள்ளவும், அடையாளம் கண்டு கொள்ளவும் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். அதை ஊக்கப்படுத்தி வளர்த்த அவர்களோடு இணைந்து அவர்களை ஆற்றல்படுத்த வேண்டும். இவையனைத்தும் திருஅவைக்கு குடும்பங்கள் ஆற்ற வேண்டிய செயல்களாகும்.

நான்காவதாக, நல்ல குடும்ப வாழ்க்கை நல்ல இறையழைத்தல் பெறுவதற்கான பின்னணியாக உள்ளது. நல்ல குடும்பங்களிலிருந்து நல்ல இறையழைத்தல்கள் உருவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. புனிதமான இறையழைத்தல்கள் உருபெற தூய வாழ்க்கை வாழும் பெற்றோர்களின் வாழ்வு ஒரு காரணியாகும். இறையழைத்தல்களை ஊக்குவிக்க நேரடியாக நாம் எதையும் செய்யாவிட்டாலும், நம்பிக்கை, அன்பு மற்றும் ஜெபத்தில் வேரூன்றி வாழும் குடும்பங்களிலிருந்து நல்ல இறையழைத்தல்கள் உருவாகும்.

மேலும், நமது திருஅவை மற்றும் சமூகத்தில் குருக்கள், அர்ப்பண வாழ்வு மேற்கொள்ளவோர் மதிக்கவும், கௌரவிக்கவும், அவர்களை பற்றி நல்லதை சொல்லவும் நமக்கு இயலட்டும். அவர்கள் மூலம் நாம் பெற்றுகொள்ளும் பணிவிடைகளை அடையாளம் கண்டு கொள்வோம். இவையனைத்தும் இறையழைத்தலை ஊக்குவிக்கும் மறைமுக வடிவங்களாகும். இறையழைத்தல் அன்பு செய்யவும் தொண்டாற்று வதற்குமான அழைப்பாகும். சிறுவயதிலிருந்தே நம்முடைய பள்ளிக் கூடங்களில் பயிலும் பிள்ளைகளின் இதயங்களில் இறையழைத்தல் பற்றிய எண்ணங்களை விதைக்க வேண்டும். மறைக்கல்வி வகுப்புகளில் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் இவற்றை கற்றுக் கொடுக்க வேண்டும். நம்முடைய ஆலயங்களில் இறையழைத்தலைப் பற்றிய சிந்தனைகளை பல வகைகளில் அனுதினம் எடுத்துரைக்க வேண்டும். அவ்வாறு இறையழைத்தலை ஊக்குவிக்கும் சாதகமான சூழலை உருவாக்க

வேண்டும். ஆனால் இன்று திருஅவைக்கு வெளியே குருக்களும், துறவிகளும் கீழ்தரமாக காட்டப்படும் பல தளங்களும் நிகழ்வுகளும் உள்ளன. அதற்கு அவர்களுடைய தனிப்பட்ட பல காரணங்களும் இலக்குகளும் உண்டு. அப்படிபட்ட எண்ணங்களுக்கு அடிப்பணியாமல் நம்பிக்கை மற்றும் தூய்மைமிக்க அர்ப்பண வாழ்வு வாழ்வதே உன்னத அழைப்பு மற்றும் கடமை என்ற உணர்வை குழந்தைகளுக்கு வழங்க முதியவர்களுக்கு இயல வேண்டும். இறையழைத்தலை ஆதரிக்கவும், வளர்க்கவும் விடா முயற்சியுடன் முயற்சி செய்வதில் அனைவரும் மகிழ்ச்சி காண வேண்டும்.

நமது திருஅவையில், குறிப்பாக துறவற சமூகங்களில் இறையழைத்தல்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்பாடுகளின் வெற்றிக்காக நாம் மன்றாடுவோம். இந்த இலக்கை நோக்கி அயராது உழைக்கும் மேன்மைதங்கிய காதோலிக்கா பாவா அவர்களையும், மேதகு ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும் மற்றும் பொதுநிலையினரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து பாராட்டுகிறேன்.

ஆண்டவர் தமது கருணையும் ஆசீரையும் உங்கள் ஒவ்வொருவர் மேலும், நம்முடைய திருஅவையின் மீதும் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறேன். மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை குருக்கள் மற்றும் துறவற வாழ்வுக்கான இறையழைத்தல்கள் பெற்று செழித்தோங்கட்டும் என்று மனப்பூர்வமாக மன்றாடுவோம். அனைவருக்கும் பெந்தகோஸ்து திருநாளின் ஆசீர்மிகுந்த வாழ்த்துக்கள்.

*இப்படிக்கு,*

**ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்**

✝ மேதகு சாமுவேல் மார் ஐரேணியோஸ்
தலைவர், இறையழைத்தலுக்கான திருஅவை ஆணையம்,
பத்தனம்திட்டை மறைமாவட்ட ஆயர்.



# குருமட செய்திகள்

## குருமட குடும்ப விழா

ஏப்ரல் மாதம் 31-ம் நாள் அன்று குருமட குடும்பவிழா மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் அருள் தந்தையர்கள், அருள்சகோதரிகள், அருட்சகோதரர்கள், ஆசிரியர்கள் மற்றும் அருட்சகோதரர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோடை விடுமுறை முகாம்

இவ்வருட கோடை விடுமுறை முகாம் ஏப்ரல் மாதம் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் செல்லங்கோணம் பங்கில் வைத்து நடைபெற்றது.

## திருத்தொண்டர் மற்றும் இளநிலை பட்டங்கள்

திருத்தொண்டர் மற்றும் இளநிலை பட்டங்கள் 24-05-2023 அன்று இலவுவிளை இளநிலை குருத்துவ பயிற்சியகத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருட்சகோதரர் அபிஷேக் திருத்தொண்டர் பட்டமும், அருட்சகோதரர்கள் ரவீன், சபின், றோபின், ரெஜின், ஐவின் ஆன்றோ, பால்சன், ஜெறோம், அஜின் அலோசியஸ் ஆகியோர்கள் துணைத்திருத்தொண்டர் பட்டமும், அருட்சகோதரர் விஜீஷ் ராஜ் குருத்துவ ஆடையும் பெற்றுக்கொண்டனர்.

## புது குருமாணவர்கள் வருகை

இலவுவிளை தூய எப்ரேம் இளநிலை குருத்துவ பயிற்சியகத்தில் இவ்வருடம் நான்கு புதுகுருமாணவர்கள் வருகை புரிந்துள்ளனர். புதுகுருமாணவர்களின் விவரம் : சகோ. பெப்னோ - கிராத்தூர், சகோ. அஜய் ராஜ் - பாலவிளை, சகோ. ஜிஜோலின் - சூசைபுரம், சகோ. ஜோஸ்பின் - பள்ளியாடி.

# மறைமாவட்ட மேய்ப்புப் பணி அறிவுரை குழு கூட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்டம் மேய்ப்பு பணி அறிவுரைக் குழுவின் 3-வது கூட்டம் மேதகு ஆயர் டாக்டர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் ஆயர் இல்லத்தில் வைத்து 18.06.2023 ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் ஆரம்பமானது. மேதகு ஆயர் அவர்கள் ஆரம்ப ஜெபத்தை நடத்தி மணிப்பூர் மாநிலத்தில் கலவரத்தால் உயிர் இழந்த கிறிஸ்தவ மக்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தி, அம்மக்களுக்காக இறை வேண்டல் செய்தார்கள். இக்கூடுகையில் மாவேலிக்கரை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மலங்கரை சபை மற்றும் மேய்ப்பு பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களின் கடமைகள், பொறுப்புகள் இறை விசுவாசம், தற்போதைய மணிப்பூர் மாநில கிறிஸ்தவ மக்களின் துன்பங்கள் குறித்து விளக்கமாக பேசினார்கள்.

நமது மறைமாவட்ட மேதகு ஆயர் அவர்கள் மறைமாவட்ட வளர்ச்சிகள் பற்றியும் புது முயற்சிகள் பற்றியும் உரையாற்றி அனைவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

பின்னர் மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. மேதகு ஆயர் அவர்களும், குருகுல முதல்வர் அவர்களும், Chancellor தந்தை அவர்களும் பதில் உரைகளும் விளக்கங்களும் அளித்தார்கள். குருகுல முதல்வரும் பேராலய பங்கு தந்தையுமான மோண் ஜோஸ் பிறைட் அவர்கள் பேராலய கட்டுமான பணிகள் குறித்த விபரங்கள் தெரிவித்தார்கள். மேய்ப்பு பணி அறிவுரைக் குழு செயலர் திரு. அருள்தாஸ் அவர்கள் நன்றி கூற, மேதகு ஆயர் அவர்கள் இறுதி ஆசீர் ஜெபத்துடன் சுமார் மாலை 6.00 மணி அளவில் கூட்டம் இனிது நிறைவு பெற்றது.



# மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்

மார்த்தாண்டம் மறைமாவட்டம், எல்லா வருடமும் நடத்தும் மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன் இந்தவருடமும் காத்திருப்பின் இறுதி நாட்களாகிய மே மாதம் 26, 27, 28 ஆகிய நாட்களில் குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து அருட்தந்தை ஸ்டேன்லி டேவிட் (விவிலிய பேராசிரியர், புனித பேதுரு உயர்நிலை குருத்துவ பயிற்சியகம், பெங்களூர்) அவர்களின் தலைமையில், அருட்தந்தை இருதய ராஜ் (ஓசூர் மறைமாவட்டம்) அவர்களின் ஜெப வழிநடத்துதலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நம் மறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களும், குருகுல முதல்வர், குருக்கள், அருட்கன்னியர்கள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றார்கள். அத்தோடு மறைமாவட்ட பள்ளி கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மே மாதம் 27 -ஆம் நாள் காலை 10 மணி முதல் சிறப்பு தியானமும் நடைப்பெற்றது.

இந்நிகழ்வுகளையெல்லாம் தாபோர் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை சிபி அவர்களோடு இணைந்து அருட்தந்தை ஜெனிட்டோ, அருட்தந்தை ஆன்றோ ஜெபின் ஆகியோர் முன்நின்று வழிநடத்தினார்கள்.

# Transfers and Appointments of Priests 2023
## Marthandam Diocese

| No. | Name | Parishes | Responsibilities |
|---|---|---|---|
| 1 | Rev. Fr. S. Varghese Cor-episcopo | Panachamoodu<br>Puliyoorsalai<br>Chempakatharisu | District Vicar - Panachamoodu |
| 2 | Fr. Devadas | | Procurator |
| 3 | Fr. Michel Mukkampalath | Puspagiri<br>Pallukuzhi | Director - Legion of Mary |
| 4 | Fr. John Kumar | Mantharamputhur<br>Kanyakumari | Director -<br>Mar Ivanios Animation Centre, Kanyakumari<br>District Vicar - Nagercoil |
| 5 | Fr. Sibi | Chellamkonam<br>Kattuvilai<br>Punkarai<br>Alwarcoil | Director - AYF<br>District Vicar -<br>Azhyamandapam |
| 6 | Fr. Franklin Jose | | St. Paul's Education Academy |
| 7 | Fr. Bernard | | Correspondent -<br>BEd. College |
| 8 | Fr. Sunny Mathew | USA | |
| 9 | Fr. Satheesh | Unnamalaikadai<br>Valyavilai | Correspondent -<br>Mar Ephraem Engineering College<br>Mukkampala Estate |
| 10 | Fr. Maria John | | Studies |
| 11 | Fr. Baburaj | James Town | Studies |
| 12 | Fr. Josephin Raj | Canada | |
| 13 | Fr. Arnold Dias | Kannacode | Correspondent -<br>Mar Ivanios School<br>Santhom Press, Marthandam |
| 14 | Fr. Robert | Thenikulam - Aloor | |
| 15 | Fr. Bennet | Tirunelveli<br>Nice Nagar<br>Kallakadu | Mission Coordinator |
| 16 | Fr. Wilbright | Christuvilagam<br>Anapottai<br>Erachakulam<br>Kulasekaramputhoor<br>Peruvilai | |
| 17 | Fr. Jerome | Aral Kumarapuram | Director - MIDS |
| 18 | Fr. Arul Shyju | Pilankalai<br>Poonthoppu | Correspondent -<br>MSC Schools |
| 19 | Fr. Sajeev | Kidarakuzhi | |
| 20 | Fr. Stephen Palavilai | Adaikakuzhi | Bursar -<br>Mariagiri School |
| 21 | Fr. Shiju Jose | Manjathoppu | Director - Catechism<br>Bursar - BEd. College |
| 22 | Fr. Ajeesh Kumar | Soosaipuram | Director - HOM<br>Director -<br>Pastoral Centre |
| 23 | Fr. Abinson Alex | Parvathipuram<br>Beach Road | |
| 24 | Fr. Jebin John | Boothapandy<br>Mukkadal<br>Gnadasapuram<br>Sankaralingampara<br>Gnalam | |
| 25 | Fr. Suresh Antony | Ganapathikal<br>Sivalokam | Studies |
| 26 | Fr. Jeevan George | | Bursar -<br>Mar Gregorious<br>School Kirathoor |

| | | | |
|---|---|---|---|
| 27 | Fr. Wilfin | Chennai | Studies - Press Management |
| 28 | Fr. John Shibu | Anakarai Muthalar | Correspondent - Annakarai School |
| 29 | Fr. Anto Jebin | Mukkampali Peruvallikadavu Surulode | Bursar - Mar Ivanios School Assistant Director - AYF |
| 30 | Fr. Justin Nellikavilai | Mecode Meenachal | |
| 31 | Fr. Shaji Christo | | Communication Media Notary |
| 32 | Fr. Jenitto | Vettukuzhi Kullaparai | Director - Charismatic Movement |
| 33 | Fr. Jose G | Pechiparai | Malankaravilaku Director - MCCL Language Studies |
| 34 | Fr. Ajeesh Johan | Mugavoor | |
| 35 | Fr. Ratheesh Richard | Trichy Mission | Studies |

| No | Name | Co-Priest to |
|---|---|---|
| 1 | Fr. Sunish Kumar | Fr. Wilbright |
| 2 | Fr. Vibins Wilson | Fr. Franklin Jose |

| No | Name | Assistant to |
|---|---|---|
| 1 | Fr. Stephen | Fr. Jose Marthandam |
| 2 | Fr. Ajeesh | Rev. Fr. S. Varghese Corepiscopo |
| 3 | Fr.Aneesh | Fr. Sibi |
| 4 | Fr. Vibin Raj | Msgr. Jose Bright |
| 5 | Fr. Siljin | Fr. Jebin John |



# Change of Addresses

**Rev. Fr. Jose G**
MIDS Office, Edaivilagam,
Kazhuvanthittai, Kuzhithurai P.O,
K.K. Dist – 629 163

**Rev. Fr. Sibi**
Malankara Catholic Church
Chellamkonam, Kappiara P.O.,
K.K. Dist – 629 156

**Rev. Fr. Abinson Alex**
Malankara Catholic Church
15-67A, Kurisadi Street,
Vetturnimadham, Parvathipuram P.O.,
K.K. Dist – 629 003

**Rev. Fr. Devadas**
Procurator
Bishop's House, Marthandam
K.K. Dist – 629 165

**Rev. Fr. S. Varghese Corepiscopa**
Malankara Catholic Church
Panachamoodu, Mancode P.O.
K.K. Dist – 629 152

**Rev. Fr. Anto Jebin**
MIDS Office, Edaivilagam,
Kazhuvanthittai, Kuzhithurai P.O,
K.K. Dist – 629 163

**Rev. Fr. Micheal Mukkampalath**
Malankara Catholic Church
Pushpagiri, Fathima Nager P.O.,
Adaikkakuzhi Village,
K.K. Dist – 629 160

**Rev. Fr. Robert**
Malankara Catholic Church
15-67A, Kurisadi Street,
Vetturnimadham, Parvathipuram P.O.,
K.K. Dist – 629 003

**Rev. Fr. Satheesh Kumar**
Mar Ephraem College of
Engineering & Technology,
Malankara Hills, Elavuvilai P.O.,
K.K. Dist – 629 171

**Rev. Fr. Stephen Palavilai**
Malankara Catholic Church
Mariagiri, Kaliakkavilai P.O,
K.K. Dist – 629 153

**Rev. Fr. Arnold Dias**
St. John Maria Vianney Priests Home,
Diocese of Marthandam,
10-1/A2, Vilavancode,
Kuzhithurai, K.K.Dist – 629 163

**Rev. Fr. Arul Shyju**
Malankara Catholic Church
Pilankalai, Mekkamandapam P.O.,
K.K. Dist – 629 166

**Rev. Fr. Wilfin Biju**
St.George M.S.C. Church,
George Street, Retythopu,
Marutheram Nager,
Ayapakkam, Chennai - 77

**Rev. Fr. Willbright**
Malankara Catholic Church
Christuvilakam,
Krishnancoil P.O. Nagercoil,
K.K. Dist – 629 001

**Rev. Fr. Josephin Raj**
Bishop's House, Marthandam
K.K. Dist – 629 165

**Rev. Fr. Justin**
St. Francis Xavier Church
Mecode, Kaliakkavilai Via.,
K.K. Dist – 629 153.

**Rev. Fr. Shiju Jose**
Malankara Catholic Church
Manjathopu, Vallavilai P.O.
Via Kollencode,
K.K. Dist – 629 160

**Rev. Fr. Ajeesh Kumar**
9/41 Pastoral Centre,
Kuzhithurai, Kuzhithurai P.O.
K.K. Dist – 629 163

**Rev. Fr. Jebin John**
St.Thomas MSC Church
Aatuparai, Boothapandi,
Boothapandi P.O.
K.K. Dist – 629 852

**Rev. Fr. Babu Raj**
St.Mary's Malankara Catholic Church, Malankara Bhavan,
Periyar Nagar, Kanyakumari,
K.K. Dist – 629 702

**Rev. Fr. Jennito**
Malankara Catholic Church
Kanchiyode, Mancode P.O.
K.K. Dist – 629 152

**Rev. Fr. Stephen John**
Malankara Catholic Church
Kirathoor, Kirathoor P.O.
K.K. Dist – 629 181

**Rev. Fr. Anish**
Malankara Catholic Church
Chellamkonam, Kappiara P.O.
K.K. Dist – 629 156.

**Rev. Fr. Siljin**
St.Thomas MSC Church
Aatuparai, Boothapandi,
Boothapandi P.O.
K.K. Dist – 629 852

**Rev. Fr. Vibin Raj**
Christu Raja Cathedral
Christurajapuram,
North Street, Marthandam P.O.
K.K. Dist – 629 165

**Rev. Fr. Suresh Antony**
MIDS Office, Edaivilagam,
Kazhuvanthittai,
Kuzhithurai P.O,
K.K. Dist – 629 163

**Rev. Fr. Ajesh**
Malankara Catholic Church
Panachamoodu, Mancode P.O.
K.K. Dist – 629 152

**Rev. Fr. Ratheesh Richard**
St. Paul's Seminary,
Trichy.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜூலை** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **21, 22** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மேரி மக்கள் துறவற சபை

### வாழ்த்துகிறோம்

நம்வாழ்வு வார இதழின் 'கிறிஸ்தவ எழுத்தாளர் விருது 2023' வழங்கும் நிகழ்வு மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோனி சாமி அவர்களின் தலைமையில் மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் முன்னிலையில் மேய் மாதம் 27 அன்று நடைப்பெற்றது. மேரிமக்கள் துறவற சபையின் உறுப்பினராக அருட்சகோதரி மேரி ஆனந்த DM அவர்கள் இவ்விருதை பெற்றார்கள்.

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாண அருட்சகோதரி கிறிஸ்துராணி மருத்துவ பட்டப்படிப்பு முடித்து (MBBS) பட்டம் பெற்றுள்ளார்கள். அத்தோடு அதற்கான பட்டய சான்றையும் பெற்றுள்ளார்கள். அருட்சகோதரி அவர்களின் மருத்துவப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

### வருந்துகிறோம்

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினராகிய அருட்சகோதரி வியானி (85) இறைவனடி சேர்ந்தார்கள். இவரின் கல்லறை அடக்கம் (19.06.2023) அன்று காலை 11 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்களின் தாய் இல்ல கல்லறைத் தோட்டத்தில் நடைபெற்றது.

மேரி மக்கள் துறவற சபையின் செயின்ட் ஜோசப் மாகாண உறுப்பினராகிய அருட்சகோதரி நீட்டா பிரான்சிஸ் (65) இறைவனடி சேர்ந்தார்கள். இவரின் கல்லறை அடக்கம் (11.06.2023) அன்று மதியம் 12.00 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்களின் தாய் இல்ல கல்லறைத்தோட்டத்தில் நடைபெற்றது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## Thalirkal Ulagam - Account Closing

தளிர்கள் உலகம் திட்டத்தின் வழியாக கல்வி உதவித் தொகை பெற்று பள்ளிக் கல்வியை நிறைவு செய்து தற்போது உயர்கல்வி கற்பதற்காக இந்த திட்டத்திலிருந்து விடைபெறும் பயனாளிகளுக்கான சிறப்பு கூட்டம் 09.06.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையேற்று மாணவர்களை வாழ்த்தியதுடன் அறிவுரைகளும் வழங்கினார்கள். மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள்; இத்திட்டம் வழியாக தாங்கள் அடைந்த நன்மைகளை அனுபவமாக பகிர்ந்தனர். தொடர்ந்து 70 மாணவர்கள் தங்களின் வங்கி கணக்கை முடித்து இத்திட்டத்திலிருந்து விடைபெற்றனர். மேலும் சிறுசேமிப்பு தொகை மொத்தம் ரூபாய் 12,09,299/- பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

## CTWWC – Family Day Celebration

CTWWC திட்டத்தின் பயனாளிகளுக்கான குடும்ப விழாவானது 26.05.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் திருமதி. அபிஷா கெவின் அவர்களால் ஒரு மணி நேர கருத்தரங்கு நடத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற விழாவில், மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழகச் சமூகப்பணி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை, மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், அருட்தந்தை ஷிஜு ஜோஸ், திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், மற்றும் CRS திட்ட அலுவலர் சஞ்சனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்றும் குழந்தைகளை காப்பகங்களில் சேர்ப்பதை நிறுத்திவிட்டு பெற்றோருடன் சேர்ந்து வாழ வைக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த விழாவில் மொத்தம் 429 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## கல்வி உதவித்தொகை வழங்குதல்

தளிர்கள் உலக மாணவர்களுக்கு மிட்ஸ் நிறுவனம் வழியாக ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வருடத்திற்கான முதல் கட்டக் கல்வி உதவித் தொகையானது 31.05.2022 அன்று மிட்ஸ் அலுவலகம் கழுவன்திட்டையில் வைத்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். மொத்தம் 234 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 5,85,000/- கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

## தளிர்கள் உலகம் – சிறப்புப் பயிற்சி

தளிர்கள் உலகத் திட்டத்தின் பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்புப் பயிற்சியானது 19.06.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் மாணவ மாணவிகளுக்கு திருமதி. பிபி அவர்களால் ஊக்கப்படுத்துதல் பயிற்சி நடத்தப்பட்டது. பின்னர் அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அவர்கள், வெற்றியாளர்களாக மாற வேண்டுமெனின் எவ்வாறு செயல்பட வேண்டுமென மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். மாணவர்களின் பெற்றோருக்கு Dr. சுரேஷ் கண்மருத்துவமனை சார்பில் இலவச கண்மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த சிறப்பு பயிற்சி மற்றும் கண் மருத்துவ முகாமில் 178 மாணவர்களும் 98 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

## உதவித் திட்டங்கள்

1. 23.05.2023 அன்று கோல்பிங் திட்டத்தின் சார்பாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 25 உறுப்பினர்களுக்கு பசு வளர்த்தல் கடனாக நபருக்கு ரூபாய் 15,000/- வீதம் 25 உறுப்பினர்களுக்கு ரூபாய் 3,75,000/- மற்றும் வீட்டுகடனாக நபருக்கு 50,000/- வீதம் 8 உறுப்பினர்களுக்கு ரூபாய் 4,00,000/- கடன் உதவியாக வழங்கப்பட்டது.

2. 13.06.2023 அன்று கோல்பிங் குடும்பங்களில் உள்ள 20 உறுப்பினர்களுக்கு நபருக்கு ரூபாய் 15,000/- வீதம் ரூபாய் 3,00,000/- கழிவறைக் கட்டுவதற்காக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 19.05.2023 அன்று மிட்ஸ் 'எழுவோம் இயக்கம்' சார்பில் பேரிடர் மேலாண்மை குறித்த கருத்தரங்கு காரிதாஸ் நிறுவன மண்டல மேலாளர் Dr. ஜாண் ஆரோக்கியராஜ் அவர்களால் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கில், மொத்தம் 40 எழுவோம் இயக்க தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

2. 14.06.2023 அன்று கல்லுவிளை சமூகப் பணி மையத்தில் வைத்து CTWWC சார்பாக மனநல பாதிப்பை கண்டறிதல் குறித்த கருத்தரங்கானது நடைபெற்றது. இந்த கரத்தரங்கில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், CTWWC திட்ட அலுவலர் திருமதி. வினிதா ராணி மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## COR-EPISCOPO INSTALLATION

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 20.05. 2023 அன்று கல்லூரியின் தாளாளர் தந்தை பேரருட்தந்தை S.வற்கீஸ் அவர்களுக்கு கோர்எப்பிஸ்கோப்பா பட்டமானது, மார்த்தாண்டம் மறைமாவட்ட பேராலயத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்களால் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கல்லூரியிலிருந்து அனைவரும் கலந்துகொண்டார்கள். 22.05.2023 அன்று பேரருட்தந்தை S.வற்கீஸ், பேரருட்தந்தை பிரேம் குமார் அவர்களுக்கு கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

### பிரிவு உபசார விழா (Farewell Day Meeting)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 22-05-2023 அன்று கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை S.வற்கீஸ் கோர்எப்பிஸ்கோப்பா தலைமையில், முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்களின் முன்னிலையில் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது.

05.06.2023 அன்று கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை .வற்கீஸ் கோர்எப்பிஸ்கோப்பா மற்றும் கல்லூரி Bursar அருட்தந்தை சிபி அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது.

### உலக சூற்றுச்சூழல் தினம்

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 30-6-2023 அன்று முதலாமாண்டு மாணவர்கள் சார்பாக ஜூன் 5-ம்



தேதியன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை சிறப்பிக்கும் பொருட்டு கல்லூரி வளாகத்தில் பழமரக்கன்றுகள் நடப்பட்டது.

### வரவேற்பு

கிராத்தூர் மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 05-06-2023 அன்று மதியம் புதிதாக பொறுப்பேற்ற தாளாளர் அருட்தந்தை பென்னார்ட், அருட்தந்தை ஷிஜு ஜோஸ் (Bursar) ஆகிய இருவருக்கும் முன்னாள் தாளாளர் பேரருள்தந்தை S. வற்கீஸ் மற்றும் Bursar அருட்தந்தை. சிபி தலைமையில் முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் முன்னிலையில், அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைத்து பேராசிரியர்களும், ஆசிரியரல்லாத பணியாளர்களும் மாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

### உலக சுற்றுச்சூழல் தின விழா – 2023

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 09-06 -2023 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை சிறப்பிக்கும் பொருட்டு முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம் மற்றும் நமது கல்லூரியும் இணைந்து ஒருநாள் சூழலியல் கருத்தரங்கமானது 'பனைமரத்தோடு பயணிப்போம், வாழ்வினை மேம்படுத்துவோம்' என்ற தலைப்பில் பாத்திமா பள்ளி ஆசிரியை திருமதி. பிரதிஜீன் அவர்கள் கருத்தரங்கில் பனைமரத்தின் தேவையையும், பனைமரத்தின் பயன்கள் பற்றியும் உரையாற்றினார்கள். விழாவின் முடிவில் கல்லூரி வளாகத்தில் பனைமர விதை நடவு செய்யப்பட்டது.

**MCYM**
*Youth Apostolate*

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கம் சார்பாக இளைஞர்களுக்கான ஆன்மீகம் மற்றும் தலைமைத்துவ பயிற்சியின் மூன்றாவது வகுப்பு கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து ஜூன் 9 அன்று தொடங்கி ஜூன் 10-ஆம் தேதி நடந்து முடிந்தது. இந்த பயிற்சியில் மறைமாவட்டத்தை சேர்ந்த 33 இளையோர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் அரையாண்டிற்கான ஆட்சிமன்ற கூடுகையானது ஜூன் 18 தேதி மதியம் 2 மணிக்கு குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இதில் மறைவட்ட மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். இந்த கூடுகையில் MCYM மறைவட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் மறைமாவட்ட அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான தியானம் 20.06.2023 அன்று புனித குழந்தை இயேசு, கண்ணக்கோடு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. ஜெபமாலையும், தொடர்ந்து தியான உரையும் அருட்தந்தை பென்னட் அவர்களால் வழங்கப்பட்டது. இறுதியில் மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக பக்த இயக்கங்களின் செயல்பாடுகள் பற்றியும் மற்றும் மறைமாவட்ட தினவிழாவை சிறப்பிப்பதை பற்றியும் கலந்துரையாடி முதன்மைகுரு ஜோஸ் பிறைட் அவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டது.

## குலசேகரம் மறைவட்டம்

### குருக்கள் கூடுகை

குலசேகர மறைவட்ட குருக்களுக்கான கூடுகை 06-06-2023 அன்று தியானத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து மாலை ஜெபத்தை பேரருட்தந்தை S. வற்கீஸ் கோர்எப்பிஸ்கோப்பா அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைப்பெற்றது. குலசேகரம் மறைவட்டத்தில் பணியாற்றி தற்போது பிற மறைவட்டங்களில் பணி மாற்றம் பெற்று செல்லும் பேரருட்தந்தை S. வற்கீஸ், அருட்தந்தை சதீஷ் குமார், அருட்தந்தை றாபர்ட் அவர்களுக்கு மறைமாவட்ட குருக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, அருட்தந்தையர்கள் தங்கள் பங்கு பணி அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள். இறுதியாக மறைவட்ட முதன்மை குரு அறிவுரைகளையும் அறிவிப்புக்களையும் வழங்கினார்கள்.

### மறைவட்ட மறைக்கல்வி

குலசேகர மறைவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர் களுக்கான கூட்டமானது 05-06-2023 அன்று மாத்தார் பங்கில்

வைத்து நடைப்பெற்றது. இக்கூட்டத்தின் தொடக்கத்தில், மறைவட்ட இயக்குநர் அருள்தந்தை அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை குறித்து கருத்துரை வழங்கினார்கள். மறைவட்ட இயக்குநர் தந்தையின் தலைமையில், மறைவட்ட அருட்சகோதரி ஊக்குனர் அவர்களின் முன்னிலையில் கலந்துரையாடலும், புது தீர்மானங்களும் எடுக்கப்பட்டது. இறுதியில் 20 நிமிட நற்கருணை ஆராதனையுடன் கூட்டம் நிறைவுற்றது.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்




அருட்தந்தை தோமஸ் காவுவிளை
ஜூலை 03



அருட்தந்தை அலெக்ஸ் குமார்
ஜூலை 17



அருட்தந்தை அபின்சன் அலெக்ஸ்
ஜூலை 17



அருட்தந்தை ஜிபு மேத்யூ
ஜூலை 25



## ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள்



- 3 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைபெற்ற முதலாம் ஆண்டு இறையியல் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி முகாமில் வகுப்பு எடுத்தார்.
- 3 ➢ திருத்துவபுரம் தூய மூவோரிறைவன் ஆலயத்திருவிழாவை முன்னிட்டு மாலை வழிபாட்டு ஆராதனையை தலைமையேற்று வழிநடத்தி மறையுரையாற்றினார்.
- 4 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டத்தல் புதிதாக இறைபணியாற்ற வருகை தந்த DSS அருட்சகோதரிகளின் இல்லத்தை அர்ச்சித்து அருளினார்.
- 4 ➢ அணக்கரை ஆலயத்தில் அருட்சகோதரி சாந்தி பிரியா “ஜூபிலியை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

5-9 ➢ திருச்சி புனித பவுல் இறையியல் கல்லூரி பேராசிரியர்களுக்கு தியான உரை வழங்கினார்.

10 ➢ தஞ்சாவூர் மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற Labour Commission கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

11 ➢ தூத்துக்குடி மறைமாவட்டத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் திருப்பலியில் கலந்துக் கொண்டார்.

11 ➢ அம்பிலிக்கோணம் ஆலயத்தில் தூய அந்தோணியாரின் திருப்பண்டம் நிறுவி இறையாசீர் பொழிந்தார்.

11 ➢ அருட்சகோதரி நீத்தா பிரான்சிஸ் அவர்களின் இறுதி நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினர்.

12 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் முன்னாள் தாளாளர் வழியனுப்புதல் மற்றும் புது தாளாளரின் பணி பொறுப்பு வழங்கும் நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

12 ➢ நாகர்கோவிலில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

13 ➢ மார் எப்ரேம் இளம் குருமடத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட கெபியை அர்ச்சித்து அருளினார்.

14 ➢ ஆயர் இல்லத்தில் வைத்த நடைப்பெற்ற பேராலய கட்டுமான நிதிக் குழுவின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.



16 ➢ காரங்காடு ஆலயத் திருவிழாவை முன்னிட்டு திருவிழா கொடி ஏற்றி மறையுரையாற்றினார்.

18 ➢ தூய எப்ரேமின் நினைவை முன்னிட்டு இளம் குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ புல்லானி CSI ஆலயத்தின் நூற்றாண்டு விழாவில் இறைச் செய்தி வழங்கினார்.

18 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்ற மேய்ப்புபணி அறிவுரை குழு கூடுகைக்கு தலைமைத்தாங்கினார்.

19 ➢ அருட்சகோதரி வியானி அவர்களின் இறுதி நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினர்.

20 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப் பெற்ற தாபோர் தியான இல்ல ஒருங்கிணைப்பாளர்களின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

20 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப் பெற்ற Malankara School of Word and Worship -ன் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

24 ➢ மரியாகிரி மலங்கரை கத்தோலிக்க கலை கல்லூரியின் பேராசிரியர்களுக்கு சிறப்பு வழிகாட்டுதல் வகுப்பை வழிநடத்தினார்கள்.

24 ➢ கோட்டார் மறைமாவட்ட அருட்தந்தை. ஸ்டீபன் ஹென்றி அவர்களின் அம்மாவின் இறுதி நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

25 ➢ மாவேலிக்கரை மறைமாவட்டம் கற்றானம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

25 ➢ மாத்தூர்கோணம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

26 ➢ கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பாக நடைபெற்ற கடைமலைக்குன்று வட்டார கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

27 ➢ HOM சிறப்பு பள்ளியின் ஜூபிலி கொண்டாட்ட நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட தினம் மற்றும் ஆயரின் பெயர் கொண்ட விழாவை முன்னிட்டு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.






## இம்மாதம் நினைவு கூர

ஜூலை 2023


1 – தலைமைக்குரு ஆரோன்
2 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
குடும்ப தினம்
3 – துக்றோனோ (மார் தோமாவின் நினைவு நாள்)
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் பெயர்விழா
5 – எழுபத்திரண்டு அறிவிப்பாளர்கள்
6 – புலிக்கோட்டில் ஜோசப் ரம்பானின் நினைவு
புனித மரிய கொரேத்தி
9 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஆறாம் ஞாயிறு
11 – புனித பெனடிக்ட்
13 – மார் சீலாஸ்
ஆன்றணி மார் சில்வானூஸ் ஆண்டகையின் பெயர்விழா
15 – இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு (1953)
மார் குரியாக்கோஸ்
மார்த்தா யூலித்தியம்மாள்
16 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஏழாம் ஞாயிறு
புனித கார்மேல் அன்னை
17 – தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் திருநிலைப்பாடு
19 – புனித மக்ரீனா
20 – இறைவாக்கினர் எலியா
22 – புனித மகதலா மரியாள்
23 – பெந்தக்கோஸ்துக்குப்பின் எட்டாம் ஞாயிறு
இறைவாக்கினர் எசேக்கியேல்
24 – லபனோனில் தாபகராகிய புனித சர்பேல்
28 – புனித அல்போன்சா
29 – பெத்தானியாவின் மார்த்தாவும் மரியாவும் லாசரும்
30 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஒன்பதாம் ஞாயிறு
31 – லொயோலாவின் புனித இக்னேஷியஸ்

3


6


15


16


22


28


## மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்









## குருமட செய்திகள்



குருமட குடும்ப விழா



திருத்தொண்டர் மற்றும் இளநிலை பட்டங்கள்





புது குருமாணவர்கள் வருகை

## மேரிமக்கள் துறவற சபை



கிறிஸ்தவ எழுத்தாளர் விருது
(அருட்சகோதரி மேரி ஆனந்த் DM)




மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு
(அருட்சகோதரி கிறிஸ்து ராணி DM)

அடக்க திருச்சடங்கு



அருட்சகோதரி றீத்தா பிரான்சிஸ் DM)



அருட்சகோதரி வியானி DM)

## Mar Chrysostom BEd College, Kirathoor





## MIDS





## MCYM



ஆட்சிமன்ற கூடுகை



தலைமைத்துவ பயிற்சி